பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 11 2025 TUESDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பாதுகாப்புப்படைகளில் தொழில்நுட்ப மாற்றங்களை விரைவாக பின்பற்றுவது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

3. நாட்டின் கல்வி கட்டமைப்பை உருவாக்கியதில் பாரத் ரத்னா மௌலானா அபுல் கலாம் ஆஸாத்தின் பங்களிப்பு எப்போதும் நினைவுகூரத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

5. ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா வெண்ணம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<<<>>>>>>>

தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பூட்டானில் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று திம்பு சென்ற பிரதமர், உலக அமைதி பிரார்த்தனை திருவிழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் கோழைத்தனமான தாக்குதல் என்று குறிப்பிட்ட பிரதமர், இந்த சதிச்செயல் குறித்து புலனாய்வு அமைப்புகள் முழுமையான விசாரணை நடத்தி வருவதாக கூறினார்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் நீதியின்முன் நிறுத்தப்படுவார்கள் என்றும், யாரும் தப்பிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தில்லி சம்பவத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நாடு துணை நிற்கும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

முன்னதாக, திம்பு சென்றடைந்த திரு நரேந்திர மோடியை, விமான நிலையத்தில் அந்நாட்டு பிரதமர் திரு **Tshering Tobgay** மற்றும் அமைச்சர்கள் நேரில் வரவேற்றனர்.

பூட்டானின் நான்காவது மன்னர் திரு **Jigme Singye Wangchuck-**ன் **70-**ஆவது பிறந்த நாள் விழா மற்றும் நீர்மின் திட்ட தொடக்க விழாவில் அவர் பங்கேற்கிறார்.

மேலும், தற்போதைய மன்னர் திரு **Jigme Khesar Namgyel Wangchuck** மற்றும் பிரதமர் திரு **Tshering Tobgay** ஆகியோருடன் திரு நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

<<<<<<>>>>>>>

பாதுகாப்புப்படைகளில் தொழில்நுட்ப மாற்றங்களை விரைவாக பின்பற்றுவது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பாதுகாப்புக்கு தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

பாதுகாப்புத்துறையினர் எதிர்கொள்ளும் பன்முக சவால்களுக்கு தீர்வுகாண தில்லி பேச்சுவார்த்தை உதவிகரமாக இருக்கும் என்று திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

இதனிடையே, தில்லியில் குண்டுவெடிப்பு நேரிட்ட காரில் **R D X** மற்றும் அம்மோனியம் நைட்ரேட் வெடிப்பொருட்கள்

பயன்படுத்தப்பட்டிருக்க கூடும் என்று தடயவியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

<<<<<<>>>>>>>

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி, பயன்பாடு மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக மாற்ற மத்திய அரசு முனைப்புடன் பணியாற்றி வருவதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

புதுதில்லியில் பசுமை ஹைட்ரஜன் தொடர்பான சர்வதேச மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், பொருளாதார ரீதியாகவும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி அவசியமானது என்று தெரிவித்தார்.

தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கத்தின்கீழ், சாணம் மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி செய்வதற்கான புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பசுமை ஹைட்ரஜன் ஒட்டுமொத்த உலகிற்கும் பயனளிக்கும் என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நாட்டில் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை பெரும் மாற்றத்திற்கு ஆளாகி வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அனைத்து மாநில தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்துறை அமைச்சர்கள், செயலாளர்களின் மாநாட்டை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையிலான வலுவான ஒத்துழைப்பு வாயிலாக, டிஜிட்டல் கண்டுபிடிப்புகள் மற்றும் சீர்திருத்தங்கள் மூலம் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க தேவையான தொழிலாளர் சந்தையை இந்தியா உருவாக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பேசிய மத்திய இணையமைச்சர் செல்வி ஷோபா கரந்த்லாஜே, வேலைவாய்ப்புத்துறையை வலுப்படுத்தி, சமூக பாதுகாப்பை விரிவுபடுத்துவதோடு, தொழிலாளர் சட்டத்தில்

மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தொழிலாளர்களை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

நாட்டின் முதலாவது கல்வியமைச்சர் பாரத் ரத்னா மௌலானா அபுல் கலாம் ஆஸாத்-தின் பிறந்த தினம் தேசிய கல்வி தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவின் கல்வி கட்டமைப்பு மற்றும் கல்வி அறிவு வாயிலாக எதிர்கால தலைமுறையினருக்கு அதிகாரம் அளித்து, புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்காக மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஆற்றிய பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரத்தக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 122 தொகுதிகளில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி, 31 புள்ளி மூன்று எட்டு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இம்மாநிலத்தில் 121 தொகுதிகளில் கடந்த ஆறாம் தேதி முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது.

இதனிடையே, தெலங்கானா, பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் காலியாக உள்ள எட்டு சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் தற்போது நடைபெற்று வருகிறது.

வாக்கு எண்ணிக்கை வரும் 14-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<<>>>>>>>>

மத்திய நிதியமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திருமதி நிர்மலா சீதாராமன், தமிழகத்தின் கோவையில் இன்று அக்கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

கோவை, நீலகிரி மாவட்டங்களை சேர்ந்த பிஜேபி-யின் பல்வேறு அணிகளை சேர்ந்த நிர்வாகிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, அவர் பெண் தொழில்முனைவோருடன் கலந்துரையாட உள்ளார்.

மேலும், வணிகர் சங்க நிகழ்ச்சியிலும் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்க உள்ளார்.

<<<<<<>>>>>>>

டிஜிட்டல் பொது கட்டமைப்பு, பசுமை எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இந்தியா — சிலி இடையிலான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்த இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

சாண்டியாகோவில் நடைபெற்ற இந்தியா — சிலி வெளியுறவு ஆலோசனைக்குழுவின் ஒன்பதாவது கூட்டத்திற்கு வெளியுறவுத்துறையின் கிழக்கு நாடுகளுக்கான செயலாளர் திரு பி குமரன், சிலி வெளியுறவுத்துறை உயரதிகாரி திரு **Rodrigo Olsen** ஆகியோர் கூட்டாக தலைமை வகித்தனர்.

இந்த கூட்டத்தில், வர்த்தகம், முதலீடு, போக்குவரத்து, சுகாதாரம், பாரம்பரிய மருந்துப்பொருட்கள், அறிவியல் தொழில்நுட்பம், அணுசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடி, சிலி அதிபர் திரு போரிக்குடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, இருதரப்பு ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது.

இந்தியர்களுக்கான விசா நடைமுறைகளை எளிதாக்குவது குறித்தும் இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>>

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் நேரிட்ட சாலை விபத்தில் நான்கு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

அம்மாவட்டத்தில் **Buyyuru** மண்டல் பகுதிக்கு உட்பட்ட **Gandigunta** அருகே தேசிய நெடுஞ்சாலையில் அவர்கள் பயணம் செய்த கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மூன்று பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், காயமடைந்த மற்றொருவர் மருத்துவமனையில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

ஈராக் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

**329** உறுப்பினர்களை கொண்ட ஈராக் நாடாளுமன்றத்திற்கான இத்தேர்தலில் **7** ஆயிரத்து **744** வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மொத்தம் உள்ள தொகுதிகளில் **83** தொகுதிகள் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலில் தற்போதைய பிரதமர் திரு முகமது ஷியா அல் சூடானி தலைமையிலான கூட்டணிக்கும், முன்னாள் பிரதமர் திரு **Nouri Al Maliki** தலைமையிலான **Shia** அணியினருக்கும் இடையே முக்கிய போட்டி நிலவுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற அவைத்தலைவர் திரு முகமது அல் ஹல்போசி தலைமையிலான சன்னி பிரிவினரும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

<<<<<<>>>>>>>

ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா வெண்ணம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

டாக்காவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் **147-145** என்ற புள்ளிக்கணக்கில் கொரியாவின் **Oh Yoohyun-**ஐ வென்றார்.

இதேபிரிவில், பிரிதிகா பிரதீப்பும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் பிரிவில் **Dhiraj Bommadevara** மற்றும் ராகுலும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

சீன ஓபன் ஸ்குவாஷ் போட்டி இன்று ஷாங்காயில் தொடங்கியது.

**<<<<<<END>>>>>>**